கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**அசல் வழக்கு எண்.332/2008**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 18.02.2025 நாளாகிய இன்று கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி(FAC), திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 18.02.2025 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | அசோக் | வயது.. | 43 |
| தந்தை பெயர்.. | கலியபெருமாள் | கிராமம்.. | சிதம்பரம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை..**

1. பொன்னம்பளசாமி மடத்தில் இருந்து எப்போது என்னை அழைத்தார்கள் என்றால் மார்ச் மாதம் 2019. என்னை அழைத்த நபரில் பெயர் தெரியுமா என்றால் தெரியும் ராமநாதன் அவர் மடத்தில் மேனேஜர். அவரை எங்கு சென்று பார்த்தேன் என்றால் பொன்னம்பளசாமி மடத்தில் பார்த்தேன். நான் எப்போதில் இருந்து ஸ்டுடியோ நடத்தி வருகிறேன் என்றால் 2017 முதல் தற்போது வரை. ஸ்டுடியோவிற்கு ஏதேனம் உரிமமோ அல்லது ஏதேனும் அரசாங்க அங்கீகாரமும் உள்ளதா என்றால் இல்லை. என்னுடைய ஸ்டுடியோ எங்குள்ளது என்றால் தெற்கு வீதியில், இந்தியன் வங்கிக்கு அருகாமையில் உள்ளது. ஸ்டுடியோவில் பில் புக் போடும் வழக்கம் உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.16 ஆவணம் என்னுடைய கடையில் பில் புக் என்றால் கணினியில் தான் ரசீது வழங்குகிறோம்.

2. எந்த தேதி மாதம் வருடத்தில் நீதிமன்றத்தில் புகைப்படம் எடுத்தேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை மார்ச் 2019 யில் எடுத்தேன். புகைபடம் எடுத்ததின் பிரன்டை நீதிமன்றத்தில் எப்போது கொடுத்தேன் என்றால் ஏப்ரல் முதல் வாரம், 2019 யில். எத்தனை புகைப்படம் எடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை, என்ன என்ன ஆவணங்களை எடுத்தேன் என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை புகைப்படம்

எடுத்தேனோ அத்தனையும் பிரின்ட் செய்தேன். A4 size புகைப்படம் enlarge செய்து எடுத்த அத்தனையும் பிரின்ட் போட்டு கொடுத்தேன் எத்தமை போட்டோ என்றால் ஞாபகம் இல்லை. எத்தமை போட்டோ, பிரின்ட், நகல் எடுத்தேனோ அத்தனையும் கொடுத்துவிட்டேனா என்றால் பொன்னம்பளசாமி மடத்தில் மேனேஜரிடம் கொடுத்தேன்.

3. மேனேஜர் எவ்வளவு புகைப்படங்கள், பிரின்ட், நகல்களை நீதிமன்றத்தில் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக புகைப்படம் எடுத்த பின்னர் என்ன செய்வோம் என்றால் கணினியில் ஏற்றி சரிபார்த்து பிரின்ட் செய்வோம். நிக்கான் கேமராவில் இருந்து கணினிக்கு ஏற்றியதற்கு ஏதேனும் ஆதாரம் உள்ளதா என்றால் இருக்கும் ஆனால் வெகுநாட்கள் ஆனதன் காரணமாக தற்போது இருக்காது. நிக்கான் கேமராவில் இருந்து கணினியில் ஏற்றிய புகைப்படம், பிரின்ட், enlargement. xerox ஆகியவற்றின் ஆதரமாக மேனேஜரிடம் ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் CD யில் ஏற்றி மேனேஜரிடம் கொடுத்தேன். கணினியில் பதிவான காப்பியை மேனேஜரிடம் கொடுத்தேனா என்றால் அதை தான் CD யில் போட்டுக்கொடுத்தேன். நிக்கான் கேமராவில் இருந்து கணினியில் ஏற்றியதற்குண்டான Record copy யை கொடுத்தேனா என்றால் CD யில் போட்டுப் பார்த்தால் properties details -இல் இருக்கும். அந்த properties details நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் புகைப்படங்களில் உள்ளதா என்றால் CD யில் இருக்கும்.

4. CD யில் அவ்வாறு Record details இல்லாததால் தான் அந்த புகைப்படங்களை பிரின்ட் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. Photography சம்மந்தமாக நான் ஏதேனும் course முடித்துள்ளேனா என்றால் இல்லை அனுபவத்தில் பேரில் தான் நான் தொழில் செய்து வருகிறேன். இதற்கு முன்பு நீதிமன்றத்திற்கு வந்து ஏதேனும் புகைப்படங்கள் எடுத்துள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக Handwriting expert;க்கு அனுப்பப்படும் புகைபடங்கள் எடுக்கும் விதம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். A4 size enlargement அவர்கள் சொல்லி எடுத்தேனா என்றால் Detail ஆக எடுக்கவேண்டும் என்று மடத்தில் மேனேஜர் சொன்னார். நான் நீதிமன்றத்தில் புகைப்படும் எடுக்கும் சமயத்தில் என்னுடன் யார் இருந்தார்கள் என்றால் நீதிமன்ற ஊழியர்கள், வழக்கறிஞர்கள் இருந்தார்கள். அவர்கள் யார் என்பது எனக்கு தெரியாது.

5. விற்பனை வரி, வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் தற்போது வரை செலுத்தியது இல்லை. ஸ்டுடியோவில் இருந்து கொடுக்கப்படும் பில் வரிசை எண். படி கொடுக்கப்படும் என்றால் சரிதான். நான் அவ்வாறு பில் கொடுக்காமல் கணினியில் ரசீது கொடுப்பதற்கு என்ன காரணம் என்றால் தினசரி போட்டோ எடுப்பவர்களுக்கு பில் புக்யில் எழுதி பில் கொடுப்பேன், ரூ.1000 தற்கு மேல் என்றால் கணினியில் ரசீது கொடுத்து சீல் போட்டு கொடுப்பேன். அவ்வாறு நான் கொடுப்பதற்கு காரணம் வருமான வரி செலுத்தவேண்டாம் என்பதால் தான் என்றால் சரியல்ல. நான் நீதிமன்றத்தில் வந்து எந்த ஒரு புகைப்படமும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த பில் மேனேஜர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக கொடுத்தேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணைமுடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

*Sd/-S.Suganiya Sri,*
Additional District Munsif(FAC)
Chidambaram.